# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**(Accredited with 'A+' Grade by NAAC in the Third Circle)**

திருச்சிராப்பள்ளி–620 024.

தோலைபேசி : 0431- 2407016 / 2407060
தொலை நகலி : **0431-2407444**

**முனைவர்.சு.சீனிவாச ராகவன்,**எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்ஸி.,பி.எச்.டி., மின்னஞ்சல் : **coe@bdu.ac.in**
தேர்வு நெறியாளர் (பொ) இனையதளம் : **www.bdu.ac.in**


---

ந.க.எண்: தே.பி./பட்டயம்/சான்றிதழ்/நவம்பர் 2021/செய்முறைத் தேர்வுகள்/01 நாள்: 30.09.2021

பெறுநர்

1.முதல்வர் அவர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்று (தன்னாட்சி பெறாத) பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும் கல்லூரிகள்.

(மற்றும்)

2.முதல்வர்/இயக்குநர் அவர்கள், **BDU-BDC** –ன் வெளிவளாக திட்டம் வாயிலாக பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகள் நடத்தப்பெறும் மருத்துவமனை மற்றும் நிறுவனங்கள்.

அய்யா / அம்மையீர்,

பொருள்: கல்லூரிகளிலும் மற்றும் **BDU-BDC Off Campus** முறையிலும் 2021 -ல் சேர்க்கை பெற்ற மாணாக்கர்களது பெயர்ப்பட்டியல் கோருவது மற்றும் நவம்பர் 2021 - ல் நடைபெற இருக்கும் பல்கலைக்கழக பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்குரிய செய்முறைத் தேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணை கோருவது – தொடர்பாக.

பார்வை: துணைவேந்தரது அனுமதி ஆணை நாள்: 29.09.2021.

-------

பட்டயம் மற்றும் சான்றிதழ் **(Regular & BDU-BDC Off Campus)** படிப்புகளில் 2021-2022 கல்வியாண்டில் சேர்க்கை பெற்ற (பருவம்/அல்பருவம்) அனைத்து மாணாக்கர்களது விவரங்களையும், அவர்களது பெயரை **10th, 12th** மதிப்பெண் பட்டியலில் பெயர் உள்ளது போல் தயார் செய்து, பிறந்த தேதி, விலாசம், தொலைபேசி எண் போன்ற விவரங்களுடன் **"New Portal"** முறையில் 20.10.2021 புதன்கிழமைக்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து முதல் பருவ/வருட மாணாக்கர்களுடைய பல்கலைக்கழக பதிவெண்களை பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கு **(Regular & BDU-BDC Off Campus)** நவம்பர் 2021 பருவத்திற்கு செய்முறைத் தேர்வுகள் நடத்திடும் பொருட்டு அதற்கான செய்முறைத்தேர்வு கால அட்டவணையை மூன்று நகல்களாக தயார் செய்து 01.11.2021-ஆம் தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி தேர்வு நெறியாளரின் ஒப்புதல் பெற்ற பிறகே செய்முறைத் தேர்வுகளை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலதாமதமாகக் கிடைக்கப்பெறும் தேர்வுக்கால அட்டவணைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிக்கலாகிறது.

பல்கலைக்கழக நவம்பர்/ஏப்ரல் செய்முறைத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணாக்கர்கள் அந்தந்த நவம்பர்/ஏப்ரல் பருவத்தேர்வில்தான் செய்முறைத்தேர்வுகளை **(Practical Examinations)** எழுத இயலும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனைத் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களுக்கும், தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

த.பி.பா.

மேலும், நடைபெற இருக்கும் நவம்பர் 2021 பருவ தேர்வுக்கான செய்முறைத்தேர்வுகளை 30.11.2021 செவ்வாய்க்கிழமைக்குள் நடத்தி முடித்து செய்முறைத் தேர்வுகளுக்கான அக மற்றும் புற மதிப்பீட்டு மதிப்பெண்களை பல்கலைக்கழக பதிவெண்களுடன், அகத் தேர்வாளர், புறத் தேர்வாளர், துறைத்தலைவர், முதல்வர் ஆகியோரது கையொப்பத்துடன் உரிய கால அவகாசத்திற்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு **exams 1.bdu.ac.in / New Portal** முறையில் பதிவேற்றம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், பதிவேற்றம் செய்த மதிப்பெண்களின் அச்சு நகலை **(Hard Copy)** அஞ்சல் வழியாக 06.12.2021-க்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்முறைத் தேர்வுகள் நடத்தும் பொழுது, பல்கலைக்கழகம் நியமித்த புறத்தேர்வாளர்கள் அன்றைய தேதியில் வரமுடியாத நிலை ஏற்பட்டால், மாணாக்கர்களின் நலன் கருதி புறத் தேர்வாளர்களை பல்கலைக்கழக பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் **(Seniority List)** கல்லூரி முதல்வர் மற்றும் துறைத்தலைவர்கள் கலந்தாலோசித்து அருகில் உள்ள கல்லூரி/நிறுவனம்/மருத்துவமனை – யில் இருந்து அழைத்து செய்முறைத் தேர்வுகளை நல்ல முறையில் நடத்தி முடிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், செய்முறைத் தேர்வுகள் சம்பந்தமாக விவரங்கள் தேவைப்பட்டாலோ அல்லது சந்தேகங்கள் எழுந்தாலோ, செய்முறைத்தேர்வுகள் துவங்குவதற்கு முன்பே தேர்வு நெறியாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளும்படி தெரிவிக்கலாகிறது.

செய்முறைத் தேர்வுகள் நடைபெற இருக்கும் விவரங்களை தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும், தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் அறிவிப்பு பலகை வாயிலாகவும், நேரடியாகவும், தொலைபேசி வாயிலாகவும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் கல்லூரி/ நிறுவனத்தில் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களின் எழுத்துத் **(Theory)** தேர்வுகளுக்கான அகமதிப்பீட்டு **(Internal Marks)** மதிப்பெண்களை உரிய கால அவகாசத்திற்குள் **exams1.bdu.ac.in / New Portal**-ல் பதிவேற்றம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை அனுப்பிவைத்து மாணாக்கர்களது தேர்வு முடிவுகளை விரைவாக வெளியிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்- கொள்ளப்படுகிறது.

தேர்வு நெறியாளர் (பொ)